**<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி</u>**
<u>முன்னிலை : திரு.N.பாரதிராஜன், பி.ஏ., பி.எல்.,</u>
**<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, பொள்ளாச்சி</u>**

<u>2023 ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 16 ஆம் நாள் திங்கள்கிழமை</u>

**<u>இ.ம.எண்.04/2023 இன் அ.வ.எண்.332/2015</u>**

வள்ளியம்மாள் காமாட்சி ... மனுதாரர்/உத்தேச தரப்பினர்

/ எதிர் /

1) சேகர் ... எதிர்மனுதாரர்/வாதி

2) விஸ்வநாதன்
3) லோகநாதன்
4) சிவசுப்பிரமணியம்
5) முத்துச்சாமி
6) நடராஜ்
7) தேவராஜ்
8) சிவராஜ்
9) அன்பழகன் ... எதிர்மனுதாரர்கள்/ 1 முதல் 8 பிரதிவாதிகள்

இம்மனுவானது கடந்த 04.10.2023 அன்று என் முன்பு இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்/ உத்தேச தரப்பினர் தரப்பில் வழக்கறிஞர் திரு. K.A.சுப்பிரமணியம் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. R.முரளி அவர்கள் ஆஜராகியும், 2 முதல் 5 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.P.K.மயில்சாமி அவர்கள் ஆஜராகியும், 7 முதல் 9 எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.M.மணிகண்டன் அவர்கள் ஆஜராகியும், 6 ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி அசல் வழக்கில் தோன்றாதரப்பினர் ஆக்கப்பட்டும், இரு தரப்பிலும் எடுத்துரைக்கப்பட்ட வாதங்களின்படியும், ஆவணங்களின்படியும், இந்நீதிமன்றம் இன்று வழங்கிடும் கீழ்க்கண்ட...

## ஆணையுரை

மனுதாரர்/உத்தேச தரப்பினரை அசல் வழக்கில் தரப்பினராக கட்சிசேர்க்க உத்தரவிட கோரி உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 1 விதி 10 பிரிவு 151–ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) இம்மனுவின் மனுதாரர் இவ்வழக்கில் கட்சிசேர்க்கப்பட வேண்டிய நபர் ஆவார். மனுதாரர் அசல் வழக்கில் வாதியான சேகர் அவர்களின் தந்தை கன்னிமுத்த தேவரின் இணைய சகோதரர்களில் ஒருவரான காமாட்சி தேவர் அவர்களின் மனைவி ஆவார். வாதி மேற்படி பொய்யான சங்கதிகளுடன் வழக்கு தாக்கல் செய்துள்ள விபரம் மனுதாரருக்கு சமீபத்தில் தான் தெரிய வந்தது. மனுதாரர் இவ்வழக்கிற்கு அவசியதரப்பினர் ஆவார். எனவே, மனுதாரரை இவ்வழக்கில் கட்சிசேர்த்து உத்தரவிடகோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) <u>1ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம்:</u>

மனுதாரர் தன்னுடைய பெயரை வள்ளியம்மாள் காமாட்சி என்பதை ஆதாரத்துடன் நிரூபிக்கவேண்டும். மேலும், 1959ம் வருடம் செய்துகொண்ட பாக பத்திரத்தின் அடிப்படையில் ஆண் வாரிசுகள் மட்டுமே கோவில் நிர்வாகம் பொருத்து உரிமை கோரமுடியும். பெண் வாரிசுகளுக்கு எந்த உரிமையும் ஏற்படுத்தப்படவில்லை. மனுதாரரின் கணவரான காமாட்சி தேவருக்கும், வள்ளியம்மாளுக்கும் எந்த வாரிசுகளும் இல்லை. அதனால், காமாட்சி தேவர் இறந்த பின்னட்டு அவருடைய உரிமைகளை மனுதாரரும், அவருடைய சகோதரரான ராஜுவுக்கும் கொடுக்கப்பட்டது. அதன்படி 1ம் எதிர்மனுதாரரும், அவரது சகோதரரும் 3 வருட கெடுவில் 2 வருடங்கள் கோவில் நிர்வாகத்தை கவனித்து வருகிறார்கள். எதிர்மனுதாரரின் சகோதரரான ராஜு தனது கோவில் நிர்வாக உரிமையை எதிர்மனுதாரரின் வசம் பாத்தியப்படுத்திவிட்டுள்ளார்.

**3.2)** மேலும், மனுதாரரின் கணவர் உயிருடன் இருக்கும் காலத்திலேயே அவரை விட்டுப்பிரிந்து அ.வ.எண்.91/75 என்ற எண்ணில் ஜீவனாட்ச வழக்கு தொடர்ந்து ஜீவனாட்சம் பெற்று வந்தார். பின்னிட்டு, 1ம் எதிர்மனுதாரரின் சகோதரர் ராஜு மேற்படி காமாட்சி தேவரின் சொத்துக்களை கிரையம் பெற்று அனுபவித்து வந்தார். அதனால், காமாட்சி தேவர் இறந்த பிறகு மனுதாரர் மேற்கண்ட ராஜு மீது அதிகப்படியான ஜீவனாம்சம் கோரி தாக்கல் செய்த வழக்கு நிலுவையில் இருந்த சமயத்தில் கடந்த 15.04.1999 தேதியன்று ஒரு ஜீவனாம்ச விடுதலை பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளார். அதன்படி மேற்படி பாகப்பத்திரத்தில் தனது கணவரான காமாட்சி தேவருக்கு உள்ள சகல பாத்தியத்தையும் மேற்கண்ட ராஜுவுக்கு பாத்தியப்படுத்தியுள்ளார். மனுதாரருக்கு அசல் வழக்கிலோ அல்லது காமாட்சி தேவரின் சொத்துக்கள்மீதோ அதனுடைய உரிமைகள் மீதோ எந்தவிதமான உரிமையுமில்லை. ஆகவே, மனுதாரர் இவ்வழக்கிற்கு அவசியதரப்பினர் இல்லை. எனவே, இம்மனு செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும்.

**4) <u>7 முதல் 9 எதிர்மனுதாரர்கள் தாக்கல் செய்த எதிருரையின் சுருக்கம்:</u>**

மனுதாரர் தன்னுடைய பெயரை வள்ளியம்மாள் காமாட்சி என்பதை ஆதாரத்துடன் நிரூபிக்கவேண்டும். மேலும், 1959ம் வருடம் செய்துகொண்ட பாக பத்திரத்தின் அடிப்படையில் ஆண் வாரிசுகள் மட்டுமே கோவில் நிர்வாகம் பொருத்து உரிமை கோரமுடியும். பெண் வாரிசுகளுக்கு எந்த உரிமையும் ஏற்படுத்தப்படவில்லை. மனுதாரரின் கணவரான காமாட்சி தேவருக்கும், வள்ளியம்மாளுக்கும் எந்த வாரிசுகளும் இல்லை. அதனால், காமாட்சி தேவர் இறந்த பின்னட்டு அவருடைய உரிமைகளை மனுதாரரும், அவருடைய சகோதரரான ராஜுவுக்கும் கொடுக்கப்பட்டது. அதன்படி 1ம் எதிர்மனுதாரரும், அவரது சகோதரரும் 3 வருட கெடுவில் 2 வருடங்கள் கோவில் நிர்வாகத்தை

கவனித்து வருகிறார்கள். எதிர்மனுதாரரின் சகோதரரான ராஜு தனது கோவில் நிர்வாக உரிமையை 1ம் எதிர்மனுதாரரின் வசம் பாத்தியப்படுத்திவிட்டுள்ளார்.

**4.2)** மேலும், மனுதாரரின் கணவர் உயிருடன் இருக்கும் காலத்திலேயே அவரை விட்டுப்பிரிந்து அ.வ.எண்.91/75 என்ற எண்ணில் ஜீவனாட்ச வழக்கு தொடர்ந்து ஜீவனாட்சம் பெற்று வந்தார். பின்னிட்டு, 1ம் எதிர்மனுதாரரின் சகோதரர் ராஜு மேற்படி காமாட்சி தேவரின் சொத்துக்களை கிரையம் பெற்று அனுபவித்து வந்தார். அதனால், காமாட்சி தேவர் இறந்த பிறகு மனுதாரர் மேற்கண்ட ராஜு மீது அதிகப்படியான ஜீவனாட்சம் கோரி தாக்கல் செய்த வழக்கு நிலுவையில் இருந்த சமயத்தில் கடந்த 15.04.1999 தேதியன்று ஒரு ஜீவனாம்ச விடுதலை பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளார். அதன்படி மேற்படி பாகப்பத்திரத்தில் தனது கணவரான காமாட்சி தேவருக்கு உள்ள சகல பாத்தியத்தையும் மேற்கண்ட ராஜுவுக்கு பாத்தியப்படுத்தியுள்ளார். மனுதாரருக்கு அசல் வழக்கிலோ அல்லது காமாட்சி தேவரின் சொத்துக்கள் மீதோ அதனுடைய உரிமைகள் மீதோ எந்தவிதமான உரிமையுமில்லை. ஆகவே, மனுதாரர் இவ்வழக்கிற்கு அவசியதரப்பினர் இல்லை. எனவே, இம்மனு செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும்.

**5)** 2 முதல் 4 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் இம்மனுவிற்கு எதிருரை எதுவும் இல்லை என மேலொப்பம் செய்யப்பட்டுள்ளது.

**6)** இரு தரப்பும் கேட்கப்பட்டது.

**7)** இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை என்னவெனில், இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே.

**8)** **<u>பிரச்சினை</u>** :

இரு தரப்பிலும் எடுத்துரைக்கப்பட்ட சங்கதிகளை இந்நீதிமன்றம் தீர பரிசீலனை செய்ததில், வழக்கு சொத்து மற்றும் அதில் உள்ள காமாட்சியம்மன்

மற்றும் மெய்யம்மன் கோவில் ஆகியவை வாதியின் பாட்டனார் சுப்பையாதேவர் மற்றும் அவரது சகோதரர் ராமசாமிதேவர் ஆகியோர் செய்துகொண்ட கடந்த 22.09.1945 தேதியிட்ட பாகப்பத்திரப்படி பாத்தியப்பட்ட சொத்துகளாகும் என்று 1ம் எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் வழக்குரையில் கூறப்பட்டு அதன்அடிப்படையில், பிரதிவாதிகள் வழக்கு சொத்திற்குள் நுழைந்து இடையூறு செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**9)** மேற்படி அசல் வழக்கானது விசாரணைக்காக பட்டியலிடப்பட்டு வந்தநிலையில் இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரரின் கணவரான காமாட்சி தேவருக்கும், மனுதாரருக்கும் எந்த வாரிசுகளும் இல்லை என்றும், மனுதாரரின் கணவர் உயிருடன் இருக்கும் காலத்திலேயே அவரை விட்டுப்பிரிந்து அ.வ.எண்.91/75 என்ற எண்ணில் ஜீவனாட்ச வழக்கு தொடர்ந்து ஜீவனாட்சம் பெற்று வந்தார் என்றும், பின்னிட்டு, 1ம் எதிர்மனுதாரரின் சகோதரர் ராஜு மேற்படி காமாட்சி தேவரின் சொத்துக்களை கிரையம் பெற்று அனுபவித்து வந்தார் என்றும், அதனால், காமாட்சி தேவர் இறந்த பிறகு மனுதாரர் மேற்கண்ட ராஜு மீது அதிகப்படியான ஜீவனாட்சம் கோரி தாக்கல் செய்த வழக்கு நிலுவையில் இருந்த சமயத்தில் கடந்த 15.04.1999 தேதியன்று ஒரு ஜீவனாம்ச விடுதலை பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றும், அதன்படி மேற்படி பாகப்பத்திரத்தில் தனது கணவரான காமாட்சி தேவருக்கு உள்ள சகல பாத்தியத்தையும் மேற்கண்ட ராஜுவுக்கு பாத்தியப்படுத்தியுள்ளார் என்றும் 1ம் எதிர்மனுதாரர்/வாதி மற்றும் 7 முதல் 9 எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிர்வாதம் வைக்கப்பட்டுள்ளது.

**10)** இம்மனு, மேற்கண்ட எதிருரையை பரிசீலனை செய்ததிலிருந்து 1ம் எதிர்மனுதாரர்/வாதி மற்றும் 7 முதல் 9 எதிர்மனுதாரர்களின் தகப்பனாருடன் பிறந்த காமாட்சி தேவரின் மனைவியே மனுதாரர் என்பது தெரியவருகிறது.

தனது கணவர் காமாட்சி தேவரின் அனைத்து உரிமைகளையும் மனுதாரர் 1ம் எதிர்மனுதாரர்/வாதியின் சகோதரர் ராஜுக்கு எழுதிக்கொடுத்துவிட்டதாக கூறியுள்ளனர். மேலும், வழக்குரையில் வாதியின் சித்தப்பா காமாட்சி தேவருக்கு வாரிசுகள் யாரும் இல்லை என்று கூறப்பட்டுள்ள நிலையில் இம்மனுவின் மனுதாரர் தன்னை காமாட்சி தேவரின் மனைவி என்று கூறியுள்ளார். 1ம் எதிர்மனுதாரர்/வாதி மற்றும் 7 முதல் 9 எதிர்மனுதாரர்களும் மனுதாரரை காமாட்சி தேவரின் மனைவி என்று ஒப்புக்கொண்டுள்ளார்கள். ஆகவே, இவ்வழக்கை முழுமையாக முடிவு செய்ய மனுதாரரும் அவசியதரப்பினர் என்றும், அவரை தரப்பினர்களாக சேர்க்காமல் இவ்வழக்கில் கண்ட பிரச்சனைகளை முழுமையாக முடிவுசெய்ய இயலாது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

முடிவில், இம்மனுவானது அனுமதிக்கப்பட்டு, மனுதாரர்/உத்தேச தரப்பினரை அசல் வழக்கில் தரப்பினராக சேர்த்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இவ்வாணையுரை என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பிழை நீக்கம் செய்ததை என்னால் இன்று (16.10.2023) அவையறிய பகரப்பட்டது.

N BHARATHIRAJAN
Digitally signed by N BHARATHIRAJAN
Date: 2023.10.16 20:32:56 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி.

**<u>மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:</u>**

..... இல்லை .....

N BHARATHIRAJAN
Digitally signed by N BHARATHIRAJAN
Date: 2023.10.16 20:33:02 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி.

------------------------------------------------------------

**<u>அசல் ஆணையுரை</u>**

இ.ம.எண்.04/2023 இன் அ.வ.எண்.332/2015

நாள் : 16.10.2023

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்

பொள்ளாச்சி

------------------------------------------------------------